# சங்கரன்கோவில் நகராட்சி

**2019–ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 19.09.2019 ம் தேதி காலை 11.00 மணிக்கு அவசரக்கூட்டம்**

**பொருள் எண்- 769**

இந்நகராட்சி வார்டு எண்.29, இராமசாமியாபுரம் 1ம் தெருவில் உள்ள வடிகால் தேங்கி நின்று சுகாதாரக்கேடு ஏற்படுகிறது. மேற்படி, வாறுகால் தேங்கி நின்று தண்ணீர் செல்ல முடியாத நிலையில் உள்ளது. மேலும், பொதுமக்கள் வீட்டுவாசல் படி வடிகால் சுத்தம் செய்ய முடியாத சூழ்நிலை உள்ளது. வடிகால் மீது உள்ள ஆக்கிரமிப்புகள் அகற்றம் செய்யப்பட்டு புதிய வடிகால் அமைக்க ரூ.13,0000/-க்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதிக்காக.

**அலுவலகக்குறிப்பு**

பொருளில் கண்ட பணியினை மேற்கொள்ள பொது நிதியிலிருந்து செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் அனுமதிக்கப்பட்டது,

**பொருள் எண்- 770**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1.2.3.11.22.27.28.29.30 மற்றும் 10 (பகுதி) 24(பகுதி) ஆகிய பகுதிகளில் முதல் மற்றும் இரண்டாம் நிலை துப்புரவு பணியானது ஏவிஎம் சர்வீஸ் பாயிண்ட் நிறுவனம் இராஜபாளையம் நிறுவனம் மூலம் பணி செய்ய இந்நகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை எண்.3016/2016/எச்1 நாள்.06.10.2018ன்படி 14.10.2018 முதல் 13.10.2019 முடிய பணி செய்ய உத்தரவு வழங்கப்பட்டது. மேற்படி பணி உத்தரவானது 13/10/2019 ல் முடிவடைகிறது. மேற்படி ஒப்பந்த பணியானது 3 ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டபடியால் நகராட்சி நிர்வாக ஆணையர் அனுமதி பெற்று புதிய ஒப்பந்தப்புள்ளி பெற்று புதிய நிறுவனம் தேர்ந்தெடுக்கும் வரை பொதுசுகாதார அவசியம் கருதி தற்போது பணி செய்து வரும் ஏவிஎம் தனியார் நிறுவனத்திற்கு தற்போது வழங்கி வரும் அதே செலவின மதிப்பீட்டில் மறு உத்தரவு வழங்கும் வரை பணிநீட்டிப்பு உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

தீர்மானம் அனுமதிக்கப்பட்டது,

**பொருள் எண்- 771**

சங்கரன்கோவில் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்ட.25-ல் புளியங்குடி ரோடு பாம்புகோவில் எதிரில் நெடுஞ்சாலை துறை மூலமாக பாலம் அகலப்படுத்துதல் பணி நடைபெற்றுவருவதால் நகராட்சி குடிநீர் பகிர்மான குழாய்கள் 6" மற்றும் 3" மெயின் பைப்லைன்கள் உடைப்பு ஏற்பட்டுள்ளது. மேலும், குடிநீர் மெயின் குழாய்களை மாற்றி அமைக்க வேண்டியுள்ளது. கீழ்கண்ட வி.ஐ.பி நகர், இந்திரா நகர், நேரு நகர் மற்றும் சேந்தமரம் ரோடு ஆகிய பகுதிகளுக்கு மெயின் குழாய்களை மாற்றி அமைக்கும் பணிமேற்கொள்ள வேண்டியதுள்ளதால் அவசர அவசியம் கருதி இந்நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்தக்காரர் திரு.ஆர். மகாலிங்கம் என்பவர் மூலம் ஒப்படைப்பு பணியாக மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்காக.

**அலுவலகக்குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. பொருளில் காணும் பணியினை மேற்கொள்ள ரூ.20000/-க்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் இந்நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்தக்காரர் திரு.ஆர்.மகாலிங்கம் என்பவர் மூலம் ஒப்படைப்பு பணியாக மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் அனுமதிக்கப்பட்டது,

**பொருள் எண்- 772**

சங்கரன்கோவில் நகராட்சி பொதுநிதியில் 2019-2020 வறட்சியின் காரணமாக 30 வார்டுகளுக்கு தனியார் டிராக்டர் மூலம் பொதுமக்களுக்கு சீரான குடிநீர் வழங்குவதற்கு மதிப்பீடு 3.00 இலட்சத்திற்கு நகர்மன்ற தீர்மான எண்.667, நாள் 28.06.19-ல் அனுமதி வழங்கப்பட்டு 03.07.19-ல் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டதில் மதிப்பீட்டு விலை வழங்கிய ஒப்பந்ததாரர் திரு.இரா. மகாலிங்கம் அவர்களுக்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டு டேங்கர் வாகனம் மூலமாக குடிநீர் வழங்கப்பட்டு வந்தது. மேலும், பொதுமக்களுக்கு கூடுதலாக குடிநீர் விநியோகம் செய்வதற்கு மிகவும் அவசரம் அவசியமாக கூடுதலாக டேங்கர் வாகனம் தேவைப்பட்டு அதற்கான நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டது. எனவே, மதிப்பீட்டு தொகையை விட கூடுதலாக ரூ.66000/- செலவினம் ஏற்பட்டுள்ளது. எனவே, மேற்கண்ட மதிப்பீட்டிற்கு திருத்திய மதிப்பீட்டு தொகை ரூ.36,6000/- இலட்சத்திற்கும் தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டைமதிடும் மன்றத்தின் அனுமதிக்கு.

தீர்மானம் அனுமதிக்கப்பட்டது,

**பொருள் எண்- 773**

சங்கரன்கோவில் நகராட்சிக்குட்பட்ட 30 வார்டுகளில் கோட்டைமலையாறு, தாமிரபரணி மற்றும் மானூர் I, II ஆகிய மூன்று கூட்டு குடிநீர் திட்டங்கள் மூலமாக குடிநீர் வடிகால் வாரியம் மூலம் பெறப்பட்டு மூன்று மேல்நிலை தொட்டிகள் திருவள்ளுவர் பூங்கா மேல்நிலை 8.00 இலட்சம் பேருந்து நிலைய தொட்டி 7.00 இலட்சம் மற்றும் கக்கன் நகர் மேல்நிலை தொட்டி 8.00 இலட்சம் இந்த மூன்று மேல்நிலை தொட்டிகளில் பொருத்தப்பட்டுள்ள Gas Chlorination Plant and Liquid Clorination Plant ஆகியவற்றிற்கு தேவையான Clorine Cylinder மற்றும் Liquid Clorine ஜூலை - 2018 முதல் டிசம்பர் வரை மதிப்பீடு தொகை ரூ.5.00 இலட்சத்திற்கு தீர்மான எண்.364, நாள் 30.07.2018-ல் அனுமதி பெறப்பட்டுள்ளது. இதற்கான பணி உத்திரவு Excellent chloro system நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பணியில் ஜனவரி 2019 முதல் ஆகஸ்ட் 2019 வரையில் கூடுதலாக மேற்படி நிறுவனத்திடம் இருந்து Gas Chlorination மற்றும் Liquid Clorination ஒப்பந்தத்தில் கொடுத்துள்ள விலை விகிதத்தின்படி பெறப்பட்ள்ளது. இதனால் மதிப்பீட்டை விட கூடுதலாக ரூ.2.50 இலட்ம் செலவினம் ஏற்பட்டுள்ளது. எனவே திருத்திய மதிப்பீட்டு தொகை ரூ.7.50 இலட்சத்திற்கும், குடிநீ பணியின் அவசியம் கருதி தொடர் நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்ற அனுமதிக்காக.

தீர்மானம் அனுமதிக்கப்பட்டது,

**பொருள் எண்- 774**

திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோவில் வட்டம், சங்கரன்கோவில் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்-20, கக்கன் நகர் தெருவில் வசித்து வருகின்ற திருமதி. தமிழரசி, க/பெ. அந்தோணிசாமி என்பவரால் சங்கரன்கோவில் நகராட்சி ஆணையாளரை 3ம் பிரிதிவாதியாக சேர்த்து சென்னை உயர் நீதிமன்றம் மதுரைக்கிளை வழக்கு எண்.W.P. (MD)

No.19672/2019-ல் வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கிற்கு எதிர் வழக்காட திரு.பி.மகேந்திரன், பி.ஏ.பி.எல் நடத்துவதற்கான வழக்கறிஞர் கட்டணம் மற்றும் செலவு ரூ.7500/- (ரூபாய் ஏழாயிரத்து ஐந்நூறு மட்டும்) திரு.பி.மகேந்திரன் பி.ஏ.பி.எல் நகராட்சி வழக்கறிஞர் அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

தீர்மானம் அனுமதிக்கப்பட்டது,

**பொருள் எண்- 775**

சங்கரன்கோவில் நகராட்சி பகுதியிலுள்ள அனைத்து கட்டிடங்களிலும் மழைநீர் சேகரிப்பு அமைப்பு ஏற்படுத்துவதற்கு ஸ்டிக்கர் துண்டு பிரசுரங்கள் கூட்டுறவு அச்சகம் மூலம் அச்சடித்து வாங்கவும் விளம்பரபலகை மூலம் விளம்பரம் செய்யவும் உத்தேச செலவின தொகைக்கு ரூ.30,0000/- (மூன்று இலட்சம் மட்டும்) மன்ற அனுமதிக்காக.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொருளில் கண்ட பணியினை மேற்கொள்ள வருவாய் நிதியிலிருந்து செலவு மன்றம் அனுமதிக்கலாம். (ந.க. எண்.0731/2019/எப்1)

தீர்மானம் அனுமதிக்கப்பட்டது,

**பொருள் எண்- 776**

சங்கரன்கோவில் நகராட்சிக்குட்பட்ட கச்சேரி ரோடு மெயின் வால்வு 6" வால்வு மற்றும் கழுகுமலை ரோடு பள்ளிவாசல் அருகில் 5" வால்வு மற்றும் கழுகுமலை மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி 5" வால்வு ஆகிய இடங்களுக்கு புதியதாக அமைக்கும் பணி செய்வதற்கு ரூ.70,000/-க்கு இந்நகர்மன்ற தீர்மான எண். , நாள் 2019-ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் மேற்படி பணியை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்பட்டதில் 13.09.2019-ல் வரப்பெற்ற கீழ்கண்ட வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்பந்தக்காரர் திரு.இரா.மகாலிங்கம் என்பவர் மதிப்பீட்டு விலை ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார். எனவே, மேற்படி குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்தக்காரர் திரு.இரா.மகாலிங்கம் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி மன்றம் அங்கீகரிக்கலாம்.

| வ.எண். | ஒப்பந்தக்காரர் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | மதிப்பீட்டுத் தொகையை விட | |
|---|---|---|---|---|
| | | | கூடுதல் | குறைவு |
| 1. | திரு. இரா. மகாலிங்கம், ஒப்பந்தகாரர் | ரூ.70,000/- | மதிப்பீட்டுக்குச்சமம் | |
| 2. | திரு. P. சிவா ஒப்பந்தகாரர் | ரூ.70,000/- | 0.12% | -- |

தீர்மானம் அனுமதிக்கப்பட்டது,

**பொருள் எண்- 777**

சங்கரன்கோவில் நகராட்சிக்குட்பட்ட திருவள்ளுவர் பூங்கா மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டியிலிருந்து லாரி மற்றும் மினிலாரி மூலம் மின்மோட்டார் இயக்கப்பட்டு குடிநீர் விநியோகம் மண்டபம் மற்றும் சத்துணவு கூடங்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. நீர்த்தேக்கத்தொட்டியில் 7.5 H.P. மோட்டார், 25 வருடம் மேலாக பழைய

மோட்டாராக உள்ளதால் புதியதாக 5 H.P. நீர்மூழ்கி மின்மோட்டார் மற்றும் ஸ்டாட்டர் மாற்றும் பணி செய்வதற்கு ரூ.60,000/-க்கு இந்நகர்மன்ற தீர்மான எண். , நாள் 2019-ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் மேற்படி பணியை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்பட்டதில் 13.09.2019ல் வரப்பெற்ற கீழ்கண்ட வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்பந்தக்காரர் திரு. இரா. மகாலிங்கம் என்பவர் மதிப்பீட்டு விலை ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார். எனவே, மேற்படி குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்தக்காரர் திரு. இரா. மகாலிங்கம் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி மன்றம் அங்கீகரிக்கலாம்.

| வ.எண். | ஒப்பந்தக்காரர் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | மதிப்பீட்டுத் தொகையை விட | |
|---|---|---|---|---|
| | | | கூடுதல் | குறைவு |
| 1. | திரு. இரா. மகாலிங்கம், ஒப்பந்தகாரர் | ரூ.60,000/- | மதிப்பீட்டுக்குச்சமம் | |
| 2. | திரு. P. சிவா ஒப்பந்தகாரர் | ரூ.60,000/- | 1.97% | -- |

தீர்மானம் அனுமதிக்கப்பட்டது,

**பொருள் எண்- 778**

சங்கரன்கோவில் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.03-ல் கோமதியாபுரம் புது 2ம் தெருவிற்கு வாறுகால் பகுதியில் அமைந்துள்ள வால்வை அப்புறப்படுத்தி புதியதாக 3" பி.வி.சி பைப்லைன் 36 மீட்டர் தூரத்திற்கு பணிகள் செய்வதற்கு ரூ.41,000/-க்கு இந்நகர்மன்ற தீர்மான எண்.760, நாள் 30.08.2019-ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் மேற்படி பணியை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்பட்டதில் 19.09.2019-ல் வரப்பெற்ற கீழ்க்கண்ட வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்பந்தக்காரர் திரு. இரா. மகாலிங்கம் என்பவர் மதிப்பீட்டு விலை ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார். எனவே, மேற்படி குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்தக்காரர் திரு. இரா. மகாலிங்கம் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி மன்றம் அங்கீகரிக்கலாம்.

| வ.எண். | ஒப்பந்தக்காரர் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | மதிப்பீட்டுத் தொகையை விட | |
|---|---|---|---|---|
| | | | கூடுதல் | குறைவு |
| 1. | திரு. இரா. மகாலிங்கம், ஒப்பந்தகாரர் | ரூ.41,000/- | மதிப்பீட்டுக்குச்சமம் | |
| 2. | திரு. P. சிவா ஒப்பந்தகாரர் | ரூ.41,000/- | 1.29% | - |

தீர்மானம் அனுமதிக்கப்பட்டது,

**பொருள் எண்- 779**

சங்கரன்கோவில் நகராட்சிக்குட்பட்டட திருவேங்கடம் சாலையில் உள்ள மின்மோட்டார் மற்றும் மேல்நிலைதொட்டியில் இருந்து தெருக்களுக்கு பொது உபயோகத்திற்கு தண்ணீர் உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது மேல்நிலை தொட்டி பழுதடைந்துள்ளது. எனவே,

மேற்கண்ட மோட்டார் அறை பழுதுபணி மற்றும் மேல்நிலை தொட்டி பழுதுபணிகள் செய்வதற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பணிமேற்கொள்ள வேண்டியதுள்ளதால் அவசர அவசியம் கருதி இந்நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்தக்காரர் திரு.கா.நிஜார் என்பவர் மூலம் ஒப்படைப்பு பணியாக மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்காக.

**அலுவலக்குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொருளில் காணும் பணியினை மேற்கொள்ள ரூ.30,000/-க்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு குடிநீர் நிதியிலிருந்து செலவு செய்யவும் இந்நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்தக்காரர் திரு.கா.நிஜார் என்பவர் மூலம் ஒப்படைப்பு பணியாக மேற்கொள்ள நடவடிக்கை நடவடிக்கை மேற்கொண்டதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் அனுமதிக்கப்பட்டது,

**பொருள் எண்- 780**

இந்நகராட்சியில் அலுவலக குடிநீர் பிரிவில் இயங்கி வரும் லாரி வாகனம் எண்.TN 76 W0817 வாகனத்திற்கு (F.C) தகுதி சான்றிதழ் புதுப்பித்தல் வாகனத்திற்கு பராமரிப்பு பணி செய்வதற்கு ரூ.38,000/-க்கு இந்நகர்மன்ற தீர்மான எண்.734, நாள் 30.08.19-ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் மேற்படி பணியை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் மேற்படி பணியை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்பட்டதில் 18.09.2019-ல் வரப்பெற்ற கீழ்கண்ட வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் Sri Muruga Motor Works குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார். எனவே, மேற்படி குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள Sri Muruga Motor Works நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1. | Sri Muruga Motor Works | ரூ.37,900/- |
| 2. | Mooza Engineer Motor Works | ரூ.40,300/- |

தீர்மானம் அனுமதிக்கப்பட்டது,

**பொருள் எண்- 781**

சங்கரன்கோவில் நகராட்சி, வார்டு எண்.25, புளியங்குடி ரோடு, சர்வே எண்.108/1, சர்வே வார்டு-A, பிளாக்-31 நகரளவு எண்.41/1-ல் உள்ள 2.32 ஏக்கர் (9389.00 சதுரமீட்டர் பரப்பளவில்) அமைந்துள்ள அங்கீகரிக்கப்பட்டுள்ள மனைப்பிரிவு ம.வ/ம(திலி)/எண்14/2018 என எண்ணிடப்பட்டு தொழிற்நுட்ப அனுமதி நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், திருநெல்வேலி அவர்களால் வழங்கப்பட்டுள்ளது. சாலை மற்றும் பூங்கா இடத்தினை ஆணையாளர், சங்கரன்கோவில் அவர்களுக்கு தானபத்திர எண்.2516/18, நாள் 1.10.2018-ன் படி ஒப்படைப்பு செய்யப்பட்டு மேற்படி இடத்தில் அமையப்பெற்றுள்ள சாலைகளை தார்சாலையாகவும், அடிப்படை வசதிகளையும் செய்துதரப்பட்டுள்ளது. எனவே, மனுதாரரால் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ள சாலைகள் மற்றும் பூங்கா இடங்களை நகராட்சி மூலம் பராமரிப்பதற்கும் இம்மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்குவதற்கும் மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

தீர்மானம் அனுமதிக்கப்பட்டது,

**பொருள் எண்- 782**

2018-2019-ம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் (திருமதி.வி.எம்.இராஜலெட்சுமி) திட்டத்தின் கீழ் சங்கரன்கோவில் நகராட்சியில் விடுபட்ட பகுதிகளில் தெருவிளக்குள் அமைக்கும் பணி ரூ.18.00/- லட்சத்தில் மேற்கொள்ள திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் தலைவர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்:அ8/6034/2018 நாள்: 14.07.2019-ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் மேற்படி பணி மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி வரவேற்கப்பட்டதில் 09.08.2019-ல் வரப்பெற்ற கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்தக்காரர் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | மதிப்பீட்டுத் தொகையை விட | |
|---|---|---|---|---|
| | | | கூடுதல் | குறைவு |
| 1. | ஸ்ரீ ஜோதிவேல் Hardwares திருநெல்வேலி | ரூ.18,00,000/- | 18.07% | |
| 2. | ஸ்ரீ கங்கா எலக்டிக்கல்ஸ் திருநெல்வேலி | ரூ.18,00,000/- | மதிப்பீட்டுக்குச்சமம்- | |

மேற்கண்ட பணியை மேற்கொள்ள வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்பந்தக்காரர் ஸ்ரீ கங்கா எலக்டிக்கல்ஸ் திருநெல்வேலி என்பவர் மதிப்பீட்டுத்தொகைக்குச்சமமாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார். எனவே, மேற்படி குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்தக்காரர் ஸ்ரீ கங்கா எலக்டிக்கல்ஸ், திருநெல்வேலி என்பவரின் ஒப்பந்தப்புள்ளி மன்றம் அனுமதிக்காக.

தீர்மானம் அனுமதிக்கப்பட்டது,

**பொருள் எண்- 783**

சங்கரன்கோவில் நகராட்சியின் தொழில் மலரில் வளர்ச்சித்திட்டப்பணிகள் மற்றும் அனைத்து திட்டங்கள் விளம்பரம் செய்தமைக்கு மாலைமலர் நாளிதழுக்கு பட்டியல் தொகை ரூ.9975/-க்கும் மன்ற அனுமதிக்காக.

**அலுவலகக் குறிப்பு:**

பொருளில் கண்ட தொகையினை பொது நிதியில் கீழ் வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.
தீர்மானம் அனுமதிக்கப்பட்டது,

**பொருள் எண்- 784**

சங்கரன்கோவில் நகராட்சி பராமரிப்பிலுள்ள தெருவிளக்குகள் தனியார் வசம் ஒப்படைத்து ஒப்படைக்கும் நாள் முதல் மூன்று வருடங்கள் பராமரிக்க இந்நகர்மன்ற தீர்மான எண்.334, நாள் 03.01.2012-ன் படி அனுமதியளிக்கப்பட்டுள்ளது. இந்நகர் பகுதியிலுள்ள

தெருவிளக்குகளை 01.05.2015 முதல் தனியார் நிறுவனம் மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேற்படி தனியார் நிறுவனத்திற்கு பராமரிப்பு பணி மேற்கொள்ள ஒப்படைக்கப்பட்ட காலம் 30.04.2018 முடிவடைகிறது. எனவே, தெருவிளக்குகள் தனியார் வசம் ஒப்படைக்க மதிப்பீடு தயார் செய்ய நகராட்சி நிர்வாக இயக்குநர் தலைமை பொறியாளர் அவர்களால் விலைப்பட்டியல் அங்கீகரித்து தர இருப்பதால் பொறியாளர் அவர்களால் விலைப்பட்டியல் அங்கீகரித்து தர இருப்பதால் மதிப்பீடு தயாரித்து ஒப்பந்தப்புள்ளி கோரும் காலம் வரை ஏற்கனவே பராமரிப்பு பணிகள் மேற்கொண்டு வரும் மெர்சஸ் ஆகாஷ் இன்ஜினியரிங் அசோசியேட்ஸ் (பி) லிமிடெட் நிறுவனத்திடம் ஒரு மாதத்திற்கு (ஆகஸ்டு) தெருவிளக்கு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள காலநீடிப்பு செய்ய ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட பராமரிப்பு கட்டணப்படி செய்யவும் இதற்கான கூடுதல் செலவுத்தொகை பொது நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
தீர்மானம் அனுமதிக்கப்பட்டது,

**பொருள் எண்- 785**

சங்கரன்கோவில் நகராட்சிக்குட்பட்ட வாரச்சந்தை தெருவில் உள்ள 3TPD கொள்ளளவு நுண்ணுயிர் உரமாக்கும் மையம் உள்ளது. அந்த மையத்திற்கு வரும் குப்பைகள் பிரித்து வைக்க Re-source Recovery shed அமைக்க வேண்டியுள்ளது. மேலும், அந்த இடம் மிகவும் பள்ளமாக உள்ளது. எனவே, மேற்கண்ட இடத்தில் Re-source Recovery shed அமைக்கவும் அதற்குண்டான பிளாட் பார்ம் அமைக்கவும் மதிப்பீடு தொகை ரூ.30,0000/-க்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதிக்காக.

**அலுவலகக்குறிப்பு**

பொருளில் கண்ட பணியினை மேற்கொள்ள பொது நிதியிலிருந்து செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.
தீர்மானம் அனுமதிக்கப்பட்டது,

**பொருள் எண்- 786**

சங்கரன்கோவில் நகராட்சிக்குட்பட்ட குப்பை கிடங்கு கழுகுமலை சாலையில் இருந்து பிரிந்து செல்லும் டைவர்சன் சாலையின் நகராட்சி உரக்கிடங்கு கிழக்கு பகுதியில் நகராட்சிக்கு சொந்தமான காலி இடத்தில் ஒரு சிலர் ஆக்கிரமிப்பு செய்து வருகின்றர். இதனால், குப்பைகள் சேகரம் செய்ய போதிய இடவசதி இல்லை. எனவே, மேற்கண்ட கிழக்கு பகுதியில் ஆக்கிரமிப்பு செய்யாத வகையில் (Compound Wall) சுற்றுசுவர் அமைக்க மதிப்பீடு தொகை ரூ.99,5000/-க்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்க்கு மன்ற அனுமதிக்காக.

**அலுவலகக்குறிப்பு**

பொருளில் கண்ட பணியினை மேற்கொள்ள பொது நிதியிலிருந்து செலவு செய்ய
தீர்மானம் அனுமதிக்கப்பட்டது,

மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்- 787**

சங்கரன்கோவில் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 16 கழுகுமலை சாலையில் தென்புறம் பொதுமக்கள் வசித்து வருகின்றனர். அவர்களுக்கு போதுமான வடிகால் வசதி இல்லை. அதனால், மழைக்காலங்களில் மழைநீர் தேங்கி நின்று சாலையில் செல்ல முடியாமல் சிரமப்படுகின்றனர். மேலும், மழைநீர் தேங்கி நிற்பதால் சுகாதார கேடு ஏற்பட்டு நோய்கள் பரவும் அபாய நிலை உள்ளதாக பொதுமக்கள் புகார் அளித்துள்ளதன் பேரில் மேற்படி இடத்தில் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்க மதிப்பீடு தொகை ரூ.45,0000/-க்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதிக்காக.

**அலுவலகக்குறிப்பு**

பொருளில் கண்ட பணியினை மேற்கொள்ள பொது நிதியிலிருந்து செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் அனுமதிக்கப்பட்டது,

**பொருள் எண்- 788**

சங்கரன்கோவில் நகராட்சிக்குட்பட்ட திருவேங்கடம் சாலை மற்றும் மீரான் சேட் காலனி இரண்டு இடங்களில் தூய்மை இந்தியா திட்டத்தின் 2018-2019 திடக்கழிவு மேலாண்மை உரமாக்கும் திட்டத்தின் கீழ் 3TPD 4TPD திறன் கொண்ட நுண்ணுயிர் உரமாக்கும் திட்டத்தின் கீழ் பணி நடைபெற்று வருகிறது. மேற்கண்ட இடங்களில் குப்பைகள் சேகரம் செய்யப்பட்டு நுண்ணுயிர் உரகிடங்கிற்கு கொண்டு வந்து குப்பைகள் தரம் பிரித்து வழங்குவதற்கு Resource Recovery center இரண்டு இடங்கிளல் செட் அமைப்பதற்கு மதிப்பீடு தொகை ரூ.50,0000/-க்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதிக்காக.

**அலுவலக்குறிப்பு**

பொருளில் கண்ட பணியினை மேற்கொள்ள பொது நிதியிலிருந்து செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.
தீர்மானம் அனுமதிக்கப்பட்டது,

**பொருள் எண்- 789**

சங்கரன்கோவில் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.16, காவேரி நகர், காந்தி நகர் கீழ 4ம் தெரு கிழக்குப்பகுதியில் குடிநீர் விநியோகம் சீரான முறையில் கிடைக்கவில்லை. மேலும், இவ்விடத்தை நேரில் ஆய்வு செய்ததன் அடிப்படையில் மேற்கண்ட பகுதிக்கு 4” சுலிஸ் வால்வு அமைத்து 4” பைப்லைன் அமைக்கும் பணிக்கு ரூ.92,000/-க்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேற்படி செலவினத்தொகை குடிநீர் நிதியிலிருந்து செலவு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

தீர்மானம் அனுமதிக்கப்பட்டது,

**பொருள் எண்- 790**

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப்பணிகள் திட்டத்தின் கீழ் சங்கரன்கோவில் நகராட்சி கக்கன் நகர் 5ம் தெருவில் புதிய அங்கன்வாடி மையம் கட்டும் பணி மேற்கொள்ள ரூ.6.00 லட்சத்திற்கு இந்நகர்மன்ற தீர்மான எண்.674, நாள் 28.06.2019 அனுமதி பெறப்பட்டுள்ளது. அதனடிப்படையில் மேற்படி பணி மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி

வரவேற்கப்பட்டதில் 05.09.2019-ல் வரப்பெற்ற கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்தக்காரர் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | மதிப்பீட்டுத் தொகையை விட | |
|---|---|---|---|---|
| | | | கூடுதல் | குறைவு |
| 1. | திரு. எஸ்.முத்தையா ஒப்பந்தக்காரர் | ரூ.6,00,000 | மதிப்பீட்டுக்குச்சமம்- | |
| 2. | திரு.எம்.போத்தி ஒப்பந்தக்காரர் | ரூ.6,00,000 | 3.82% | |

மேற்கண்ட பணியை மேற்கொள்ள வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்பந்தக்காரர் திரு.எஸ்.முத்தையா என்பவர் மதிப்பீட்டுத்தொகைக்கு சமமாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார். எனவே, மேற்படி குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்தக்காரர் திரு.எஸ்.முத்தையா என்பவரின் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்தக்காரர் திரு. எஸ். முத்தையா என்பரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.

தீர்மானம் அனுமதிக்கப்பட்டது,

**பொருள் எண்- 791**

சங்கரன்கோவில் நகராட்சி பொது நிதியின் கீழ் திருவேங்கடம் சாலை மீரான் சேட் காலனியில் Resource Recovery center அமைக்க ரூ.5.00 லட்சத்தில் மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மான எண். , நாள் அனுமதி பெறப்பட்டுள்ளது. அதனடிப்படையில் மேற்படி பணி மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி வரவேற்கப்பட்டதில் 06.09.2019-ல் வரப்பெற்ற கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்தக்காரர் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | மதிப்பீட்டுத் தொகையை விட | |
|---|---|---|---|---|
| | | | கூடுதல் | குறைவு |
| 1. | திரு. கே.நிஜார் ஒப்பந்தக்காரர் | ரூ.5,00,000 | மதிப்பீட்டுக்குச்சமம்- | |
| 2. | திரு.கே.ராஜாமுகம்மது ஒப்பந்தக்காரர் | ரூ.5,00,000 | 1.21% | |

மேற்கண்ட பணியை மேற்கொள்ள வரம்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்பந்தக்காரர் திரு.நிஜார் என்பவர் மதிப்பீட்டுத் தொகைக்குச்சமமாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார். எனவே, மேற்படி குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்தக்காரர் திரு.கே.நிஜார் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.

தீர்மானம் அனுமதிக்கப்பட்டது,

**பொருள் எண்- 792**

சங்கரன்கோவில் நகராட்சி பொது நிதியின் கீழ் வார்டு எண்.14, திருநீலகண்டர் ஊரணி கழிப்பிடம் பராமரிப்பு பணி மேற்கொள்ள ரூ.0.60/- இலட்சத்தில் மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மான எண்.608, நாள் 28.02.2019 அனுமதி பெறப்பட்டுள்ளது. அதனடிப்படையில் மேற்படி பணி மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி வரவேற்கப்பட்டதில் 19.09.2019-ல் வரப்பெற்ற கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்தக்காரர் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | மதிப்பீட்டுத் தொகையை விட | |
|---|---|---|---|---|
| | | | கூடுதல் | குறைவு |
| 1. | திரு. எஸ். ராஜப்பா ஒப்பந்தக்காரர் | ரூ.60,000 | மதிப்பீட்டுக்குச்சமம்- | |
| 2. | திரு.பி. சிவா ஒப்பந்தக்காரர் | ரூ.60,000 | 2.39% | |

மேற்கண்ட பணியை மேற்கொள்ள வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்பந்தக்காரர் திரு.எஸ்.ராஜப்பா என்பவர் மதிப்பீட்டுத்தொகைக்குச் சமமாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார். எனவே, மேற்படி குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்தக்காரர் திரு.எஸ்.ராஜப்பா என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.

தீர்மானம் அனுமதிக்கப்பட்டது,

**பொருள் எண்- 793**

சங்கரன்கோவில் நகராட்சி காந்திஜி நூற்றாண்டு விழா நாளாங்காடி கடை எண்.63/பி2 கடைக்கான குத்தகைதாரர் திரு.கே.எல்.என்.இசக்கி என்பவர் 19/6/2019ம் தேதியில் இறந்துவிட்டதால் அன்னாரின் வாரிசுதாரர்கள் திரு.கி.சங்கரநாராயணன் என்பவர் மேற்படி கடையை நடத்திக்கொள்ளவும், கடையின் வாடகையை செலுத்திக்கொள்ளவும், திரு.கே.எல்.என்.இசக்கி என்பவரின் மனைவி மாரியம்மாள் மகள்கள் பாக்கியலட்சுமி, கோமதி மகன் லெட்சுமணன் ஆகியோர் நோட்ரிக் பப்ளிக் வாயிலாக விடுதலை கொடுத்துள்ளதால், மேற்படி கடையின் பெயரினை மாற்றம் செய்வதற்கு ஆட்சேபனை ஏதும் வரப்பெறவில்லை என்பதாலும், மேற்படி கடையை திரு.இ.சங்கரநாராயணன் என்பவர் நடத்தி வருவதாலும், மேற்படி கடை எண்.63/பி2-க்கு திரு.கே.எல்.என்.இசக்கி பெயரிலிருந்து திரு.இ.சங்கரநாராயணன் பெயருக்கு பெயர்மாற்றம் செய்வதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

தீர்மானம் அனுமதிக்கப்பட்டது,

**பொருள் எண்- 794**

சென்னை மேலாண்மை இயக்குநர் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய தலைமை அலுவலக அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.280416/HGWing/GIScell/TWAD/HO/2019(VoIII) நாள்:17.12.2018 மற்றும் 280416/HGWing/DLC/SuWaSeM/2018 நாள் 13.09.2019-ன் படி அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் சங்கரன்கோவில் நகராட்சிக்குட்பட்ட வாணியர் ஊரணியில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு ஏற்படுத்த மதிப்பீடு தொகை ரூ.17,00,000/-க்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதிக்காக.

**அலுவலகக்குறிப்பு**

பொருளில் கண்ட பணியினை மேற்கொள்ள மதிப்பீடு தொகை ரூ.17,00,000/-க்கு (தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் ரூ.8,50,000/- மற்றும் நகராட்சி பங்குத்தொகை ரூ.8,50,000/-க்கு செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.
தீர்மானம் அனுமதிக்கப்பட்டது,

**பொருள் எண்- 795**

இந்நகராட்சி அரசு கட்டிடங்களில் இயங்கி வரும் கிருஷ்ணசாமி நகர் அங்கன்வாடி மையத்தில் உள்ள சமையல் அறை தரைதளம் மற்றும் மேற்கூரை மிகவும் பழுதடைந்துள்ளது. எனவே, மேற்படி அங்கன்வாடி மையத்தை பழுது நீக்கம் செய்ய ரூ.44,000/-க்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதிக்காக.

**அலுவலகக்குறிப்பு**

பொருளில் கண்ட பணியினை மேற்கொள்ள கல்வி நிதியிலிருந்து செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.
தீர்மானம் அனுமதிக்கப்பட்டது,

**பொருள் எண்- 796**

சங்கரன்கோவில் நகராட்சியில் தூய்மை இந்தியா இயக்கத்தில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் மத்திய அரசால் வழங்கப்படும் Garbage Free city க்கான மூன்று நட்சத்திர அங்கீகாரம் பெற தேவையான நடவடிக்கை மேற்கொள்ளவும், நமது நகராட்சியினை Garbage Free city யாக அறிவிக்கை செய்ய தினசரி நாளிதழில் அறிவிப்பு செய்து பொதுமக்களின் கருத்தினை பெற்று இறுதி செய்யவும், அதற்கான அனைத்து செலவினத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
தீர்மானம் அனுமதிக்கப்பட்டது,

**பொருள் எண்- 797**

இந்கராட்சி பொது சுகாதாரம் பிரிவில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்களுக்கு மற்றும் துப்புரவு மேற்பார்வையாளர்களுக்கு காலணிகள், ஓட்டுநர்களுக்கு ஷீக்கள், வாங்கி வழங்க கீழகண்ட விபரப்படி அறிக்கை குறிப்பிடப்படுகிறது.

1. இந்நகராட்சியில் துப்புரவு பணியாளர்களுக்கு தேவையான காலணிகள் மற்றும் ஷீக்கள் வாங்கவும்
2. மழைக்காலமாக உள்ள நேரங்களில் பணியின் போது பயன்படுத்தப்படும் மழைகோட் வாங்கவும்.

மேற்கண்ட விபரப்படி பொருட்கள் வாங்கி வழங்க ஒப்பந்தப்புள்ளி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளுவதற்கும் அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.2,50,000/-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
தீர்மானம் அனுமதிக்கப்பட்டது,

**பொருள் எண்- 798**

இந்நகராட்சி பொதுசுகாதார பிரிவில் இயங்கி வரும் வாகனம் TN76 Y8811 டிராக்டர் மற்றும் TN76 Y8820 டிரைலர் வாகனத்தின் தகுதிச்சான்று 07.12.2020-ல் முடிவடைவதாகவும், மீண்டும் தகுதிச்சான்று பெற பழுதுவேலைகள் செய்வதற்கும் அதற்காகும் செலவினம் ரூ.60,000/-க்கும் மேற்கொள்வதற்கும் அனுமதி வேண்டி ஓட்டுனர் தனது 10.09.2019-ம் தேதிய விண்ணப்பத்தின்படி கோரியுள்ளார். எனவே, மேற்கண்ட விண்ணபத்தின்படி டிராக்டர் மற்றும் டிரைலர் வாகனம் பழுது பார்க்கவும் அதற்கான செலவினத்துடன் கூடுதலாக பொதுசுகாதார அவசர அவசியம் கருதி உச்சவரம்பினைவிட கூடுதலாகும் செலவினத்தினை நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களின் பின்னேற்பு பெறவும் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

தீர்மானம் அனுமதிக்கப்பட்டது,

**பொருள் எண்- 799**

சங்கரன்கோவில் நகராட்சிக்குட்பட்ட கழுகுமலை சாலையில் இருந்து பிரிந்து செல்லும் டைவர்சன் சாலையில் கழிவுநீர் (FSTP) கசடு சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணி மேற்கொள்ள வேண்டியுள்ளது. எனவே, இதனருகே நகராட்சிக்கு சொந்தமான குப்பை கிடங்கில் உள்ள குப்பைகளை அகற்றும் பணிக்கு ரூ.9.90/-இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. மேற்கண்ட செலவினத்தை பொது நிதியிலிருந்து செலவு செய்வதற்கு மன்றத்தின் அனுமதிக்காக.

தீர்மானம் அனுமதிக்கப்பட்டது,

**பொருள் எண்- 800**

சங்கரன்கோவில் நகராட்சிக்குட்பட்ட கழுகுமலை சாலையில் இருந்து பிரியும் (டைவர்சன் சாலையில்) நகராட்சிக்கு சொந்தமான குப்பைகிடங்கில் உள்ள குப்பைகளை அகற்றும் பணி செய்வதற்கு ரூ.9.90/- இலட்சத்திற்கு பணியை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்பட்டதில் 09.09.2019-ல் வரப்பெற்ற கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. பெறப்பட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்தக்காரர் திரு. கா. நிஜார் ஒப்பந்தபுள்ளியினையும் தனி அலுவலகத்தின் தொடர் நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதிக்காக.

| வ.எண். | ஒப்பந்தக்காரர் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | மதிப்பீட்டுத் தொகையை விட | |
|---|---|---|---|---|
| | | | கூடுதல் | குறைவு |
| 1. | திரு. கா. நிஜார் ஒப்பந்தக்காரர் | ரூ.9.90 இலட்சம்/- | மதிப்பீட்டு விலை | |
| 2. | திரு.கா.ராஜா முகமது ஒப்பந்தக்காரர் | ரூ.9.90 இலட்சம்/- | 2.23% | |

தீர்மானம் அனுமதிக்கப்பட்டது,

**பொருள் எண்- 801**

சங்கரன்கோவில் நகராட்சிக்குட்பட்ட திருவேங்கடம் சாலையில் இருந்து பிரிந்து செல்லும் (டைவர்சன் சாலை) கழுகுமலை சாலை வரை சாலை அகலமாக உள்ளது. மேலும், அந்த சாலை திருநெல்வேலி, கோவில்பட்டி செல்லும் பிரதான சாலையாகவும் பஸ் மற்றும் கனரக வாகனங்கள் வெளியூர்களிலிருந்து அதிகமாக வருகின்றது. இதனால், பொதுமக்கள் சாலையில் அச்சமின்றி செல்லமுடிவதில்லை. எனவே, இச்சாலையில் நடுவில் Center Media அமைக்கும் பணி அத்தியாவசியம் ஆகிறது. எனவே, மேற்கண்ட பணியினை செய்வதற்கு ரூ.9.90/-இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. மேற்கண்ட செலவினத்தை பொது நிதியிலிருந்து செலவு செய்வதற்கு மன்றத்தின் அனுமதிக்காக.

தீர்மானம் அனுமதிக்கப்பட்டது,

**பொருள் எண்- 802**

சங்கரன்கோவில் நகராட்சிக்குட்பட்ட கழுகுமலை சாலையில் இருந்து திருவேங்கடம் சாலை வரை பிரிந்து செல்லும் டைவர்சன் சாலை (திருநீலகண்ட ஊரணி) கிழக்குப்பகுதியில் திருநீலகண்ட ஊரணியின் அருகில் வாகனங்கள் அதிகமாக சென்றுவருவதால் பொதுமக்களின் நலன் கருதி சென்று வர நடைபாதை அமைக்கும் பணிக்கு ரூ.9.90/- இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. மேற்கண்ட செலவினத்தை பொது நிதியிலிருந்து செலவு செய்வதற்கு மன்றத்தின் அனுமதிக்காக.

தீர்மானம் அனுமதிக்கப்பட்டது,

**பொருள் எண்- 803**

சங்ரன்கோவில் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.19 அம்பேத்கார் நகர் தெருவில் கழிப்பிடம் அருகில் நகராட்சிக்கு சொந்தமான காலியிடத்தில் ஒரு சிலர் அடிக்கடி சுகாதாரக்கேடு மற்றும் ஆக்கிரமித்தும், குப்பை கழிவுகளை கொட்டியும் நோய் பரவும் அபாயம் ஏற்படுத்துவதாக புகாரின் அடிப்படையில் இவ்விடத்தை சுற்றி சுற்றுசுவர் அமைக்கும் பணிக்கு ரூ.9.90/- இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. மேற்கண்ட செலவினத்தை பொது நிதியிலிருந்து செலவு செய்வதற்கு மன்றத்தின் அனுமதிக்காக.
தீர்மானம் அனுமதிக்கப்பட்டது,

**பொருள் எண்- 804**

சங்கரன்கோவில் நகராட்சிக்குட்பட்ட ஆடு வதை செய்யும் இடம் முதல் (FSTP) கழிவுநீர் கசடு சுத்திகரிப்பு நிலையம் புதியதாக அமைக்கும் பணி நடைபெறும் இடம் வரை காம்பவுண்ட் சுவர் அமைக்கும் பணி ரூ.9.90/-இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. மேற்கண்ட செலவினத்தை பொது நிதியிலிருந்து செலவு செய்வதற்கு மன்றத்தின் அனுமதிக்காக.
தீர்மானம் அனுமதிக்கப்பட்டது,

**பொருள் எண்- 805**

சங்கரன்கோவில் நகராட்சிக்குட்பட்ட கழுகுமலை சாலையில் தென்புறம் வசிக்கும் பொதுமக்களுக்கு வடிகால் வசதி அமைக்கும் பணிக்கு ரூ.4.50/-இலட்சத்திற்கு அதனடிப்படையில் மேற்படி பணியை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்பட்டதில் 13.08.2019-ல் வரப்பெற்ற கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. பெறப்பட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்தக்காரர் திரு. முத்து ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.

| வ.எண். | ஒப்பந்தக்காரர் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | மதிப்பீட்டுத் தொகையை விட | |
|---|---|---|---|---|
| | | | கூடுதல் | குறைவு |
| 1. | திரு. க. முத்து | ரூ.4.50 இலட்சம்/- | மதிப்பீட்டு விலை | |
| 2. | திரு.K. ராமமூர்த்தி | ரூ.4.50 இலட்சம்/- | 0.27% | |

தீர்மானம் அனுமதிக்கப்பட்டது,

**பொருள் எண்- 806**

சங்கரன்கோவில் நகராட்சிக்குட்பட்ட ஆடு வதை செய்யும் இடம் முதல் (FSTP) கழிவுநீர் கசடு சுத்திகரிப்பு நிலையம் புதியதாக அமைக்கும் பணி நடைபெறும் இடம் வரை காம்பவுண்ட் சுவர் அமைக்கும் பணி ரூ.9.90/-இலட்சத்திற்கு தீர்மான எண். நாள். அனுமதி பெறப்பட்டுள்ளது. அதனடிப்படையில் மேற்படி பணியை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. பெறப்பட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் விகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்தக்காரர் திரு. கா. நிஜார் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.

| வ.எண். | ஒப்பந்தக்காரர் பெயர் | மதிப்பீட்டுத் தொகை இலட்சத்தில் | மதிப்பீட்டுத் தொகையை விட | |
|---|---|---|---|---|
| | | | கூடுதல் | குறைவு |
| 1. | திரு. கா.நிஜார் | ரூ.9.90 இலட்சம்/- | மதிப்பீட்டு விலை | |
| 2. | திரு. கா. ராஜாமுகமது | ரூ.9.90 இலட்சம்/- | 1.57% | |

தீர்மானம் அனுமதிக்கப்பட்டது,

**பொருள் எண்- 807**

சங்கரன்கோவில் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.08 மாதாங்கோவில் தெருவில் உள்ள சிறுபாலம் உடைந்துவிட்டது. மேலும், இதனால் கழிவுநீர் மற்றும் மழைநீர் தேங்கி சுகாதார சீர்கேடு ஏற்படுகிறது. போக்குவரத்து சீராக செயல்படமுடிவதில்லை. எனவே, பொதுமக்களின் நலன் கருதி சிறுபாலத்தை அகற்றிவிட்டு புதியதாக பாலம் அமைக்கவும் மற்றும் பெயர்பலகைகள் வைக்கும் பணிக்கு ரூ.9.85/- இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. மேற்கண்ட செலவினத்தை பொது நிதியிலிருந்து செலவு செய்வதற்கு மன்றத்தின் அனுமதிக்காக.

தீர்மானம் அனுமதிக்கப்பட்டது,

**பொருள் எண்- 808**

சங்கரன்கோவில் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.25 வடக்குரத வீதியில் (கிழக்குப்பகுதி முதல் மேற்குபகுதி வரை) கூட்டு குடிநீர் திட்டப்பணிகள் முடிந்துள்ளதால் தார்சாலை மிகவும் பழுதடைந்து உபயோகமற்றதன்மையில் உள்ளது. மேலும், இச்சாலையானது தேரோட்டம் நடைபெறும் முக்கிய சாலையாக இருந்து வருகிறது. போக்குவரத்து சிக்கல் இல்லாத வகையிலும் பொதுமக்கள் மற்றும் வாகனங்கள் சீரான முறையில் பயனிப்பதற்கும், முக்கிய சாலைபணியாக இருப்பதாலும் தார்சாலை மேம்பாடு செய்யும் பணிக்கு ரூ.24.70/- இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது,

மேற்கண்ட செலவினத்தை பொது நிதியிலிருந்து செலவு செய்வதற்கு மன்றத்தின் அனுமதிக்காக.

தீர்மானம் அனுமதிக்கப்பட்டது,

**பொருள் எண்- 809**

சங்கரன்கோவில் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.24, மேலரத வீதியில் (வடக்கு பகுதி முதல் தெற்கு பகுதி வரை) கூட்டுகுடிநீர் திட்டப்பணிகள் நடைபெறுவதால் தார்சாலை மிகவும் பழுதடைந்து உபயோகமற்றதன்மையில் உள்ளது. மேலும், இச்சாலையானது தெற்குரத வீதியிலிருந்து மேலரத வீதிக்கு தேரோட்டம் நடைபெறும் முக்கிய சாலையாக இருந்து வருகிறது. போக்குவரத்து சிக்கல் இல்லாத வகையிலும் பொதுமக்கள் மற்றும் வாகனங்கள் சீரான முறையில் பயனிப்பதற்கும், முக்கிய சாலைப்பணியாக இருப்பதாலும் தார்சாலை மேம்பாடு செய்யும் பணிக்கு ரூ.24.50/-இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

மேற்கண்ட செலவினத்தை பொது நிதியிலிருந்து செலவு செய்வதற்கு மன்றத்தின் அனுமதிக்காக.

தீர்மானம் அனுமதிக்கப்பட்டது,

**பொருள் எண்- 810**

சங்ரன்கோவில் நகராட்சிக்குட்பட்ட பேருந்து நிலைய மேல்நிலை தொட்டி 7.00 L.L கொள்ளளவு மற்றும் கழுகுமலை மேல்நிலை தொட்டி 8.00 L.L கொள்ளளவு இரண்டு மேல்நிலை தொட்டிகள் மூலம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்கண்ட குடிநீர் தொட்டியில் குளோரினேசன் பிளாண்ட் பழுதாகிவிட்டது. எனவே, பேருந்துநிலைய மேல்நிலைதொட்டியில் குளோரினேசன் பிளாண்ட் Dosing Pump 2 எண்ணம் அமைக்கும் பணிக்கு ரூ.3.50/- இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

மேற்கண்ட செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து செலவு செய்வதற்கு மன்றத்தின் அனுமதிக்காக.

தீர்மானம் அனுமதிக்கப்பட்டது,

**பொருள் எண்- 811**

சங்கரன்கோவில் நகராட்சிக்குட்பட்ட பேருந்துநிலைய மேல்நிலைய தொட்டி 7.00 L.L கொள்ளளவு மற்றும் கழுகுமலை ரோடு மேல்நிலைதொட்டி 8.00 L.L கொள்ளளவு இரண்டு மேல்நிலை தொட்டிகளில் பொருத்தப்பட்டுள்ள கேஸ்குளோரினேசன் பிளாண்ட் பழுதாகிவிட்டதால் குளோரினேசன் பிளாண்ட் Dosing Pump 2 எண்ணம் அமைக்கும் பணிகள் செய்வதற்கு ரூ.3.50/- இலட்சத்திற்கு பணியை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்பட்டதில் 07.06.2019-ல் வரப்பெற்று கீழ்கண்ட வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் Excellent chloro systems என்ற நிறுவனம் மதிப்பீட்டு விலை ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளது. எனவே, மேற்படி குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள

Excellent chloro systems நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியும் குடிநீர் பணியுடன் அவசியம் கருதி மன்ற அனுமதியினை எதிர்நோக்கி முன் அனுமதியுடன் ஒப்பந்தப்புள்ளி கோரி தொடர் நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்ற அனுமதிக்ககாக.

நாள் – 19.09.2019

தனி அதிகாரி மற்றும் ஆணையாளர்,

சங்கரன்கோவில் நகராட்சி. –